# செய்தி வெளியீடு

**செய்தி வெளியீடு எண்.36/2022** **நாள் : 04.08.2022**

## பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட அனைத்து பகுதிகளில் உள்ள தெருக்களில் கழிவுநீர் செல்லும் குழாய்கள் மற்றும் இயந்திர நுழைவாயில்களில் உள்ள கசடுகளை அகற்றி தூர்வாரும் பணிகள் 21.07.2022 முதல் 30.07.2022 வரை நடைபெற்றதில் முடிக்கப்பட்ட பணிகளின் விவரங்கள்

**சென்னை குடிநீர் வாரியம் தகவல்**

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் பகுதி அலுவலகம்-1 முதல் 15 வரை உள்ள தெருக்களில் கழிவுநீர் செல்லும் குழாய்கள் மற்றும் இயந்திர நுழைவாயில்களில் உள்ள கசடுகளை அகற்றி தூர்வாரும் பணிகள் கடந்த வாரம் 21.07.2022 முதல் 30.07.2022 வரை நடைபெற்றது. மேலும், பகுதி-1 முதல் 15 வரை உள்ள தெருக்களில் முடிக்கப்பட்ட தூர்வாரும் பணிகளின் விவரங்கள் பின்வருமாறு.

| வ. எண். | பகுதி | தெருக்களின் எண்ணிக்கை | | தூர்வாரப்பட்ட இயந்திர நுழைவாயில்கள் எண்ணிக்கை | | கசடுகள் அகற்றப்பட்ட கழிவுநீர் பிரதான குழாய்கள் (மீட்டரில்) | |
|---|---|---|---|---|---|---|---|
| | | இலக்கு | முடிக்கப்-பட்டது | இலக்கு | முடிக்கப்-பட்டது | இலக்கு | முடிக்கப்-பட்டது |
| 1 | திருவொற்றியூர் | 126 | 116 | 314 | 241 | 8745 | 6135 |
| 2 | மணலி | 45 | 45 | 313 | 259 | 1830 | 1770 |
| 3 | மாதவரம் | 18 | 17 | 82 | 71 | 1945 | 1695 |
| 4 | தண்டையார்பேட்டை | 135 | 134 | 1061 | 1025 | 32379 | 30620 |
| 5 | ராயபுரம் | 137 | 137 | 646 | 634 | 20713 | 20261 |
| 6 | திரு.வி.க.நகர் | 135 | 129 | 711 | 591 | 10640 | 3495 |
| 7 | அம்பத்தூர் | 119 | 115 | 726 | 642 | 21455 | 18025 |
| 8 | அண்ணா நகர் | 149 | 149 | 8489 | 848 | 25792 | 25792 |
| 9 | தேனாம்பேட்டை | 162 | 161 | 1024 | 972 | 29948 | 28368 |
| 10 | கோடம்பாக்கம் | 144 | 144 | 1072 | 607 | 31603 | 22261 |
| 11 | வளசரவாக்கம் | 54 | 51 | 220 | 215 | 6301 | 5762 |
| 12 | ஆலந்தூர் | 81 | 81 | 858 | 233 | 3955 | 3467 |
| 13 | அடையாறு | 117 | 108 | 1011 | 721 | 36275 | 22799 |
| 14 | பெருங்குடி | 10 | 10 | 86 | 83 | 2618 | 2534 |
| 15 | சோழிங்கநல்லூர் | 28 | 28 | 206 | 203 | 6345 | 6345 |
| | **மொத்தம்** | **1460** | **1425** | **8578** | **7345** | **240544** | **199329** |

மேற்குறிப்பிட்ட 1460 தெருக்களில் உள்ள 8578 இயந்திர நுழைவாயில்களில் 2,40,554 மீட்டர் நீளத்திற்கான கழிவுநீர் பிரதான குழாய்களில் 1425 தெருக்களில் உள்ள 7345 இயந்திர நுழைவாயில்களில் 1,99,329 மீட்டர் நீளத்திற்கான கழிவுநீர் பிரதான குழாய்களில் கசடுகளை அகற்றி தூர்வாரும் பணிகள் 21.07.2022 முதல் 30.07.2022 வரை மேற்கொள்ளப்பட்டது. இப்பணிகள் தொடர்ந்து ஒவ்வொரு வாரமும் மேற்கொள்ளப்படும்.

எனவே, பொதுமக்கள் தங்கள் பகுதியில் உள்ள தெருக்களில் கழிவுநீர் அடைப்பு / வழிந்தோடுதல் தொடர்பான புகார்களை சம்பந்தப்பட்ட பகுதி அலுவலகத்திலும் மற்றும் பணிமனை அலுவலகத்திலும் தொடர்பு கொண்டு தங்களுடைய குறைகளை நிவர்த்தி செய்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு மேலாளர்**
**சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும்**
**கழிவுநீரகற்று வாரியம்**